Dina Malar
16.01.2019
Wednesday



வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி பொங்கல் விழாவில் கோபூஜை நடந்தது.

# ஜெயின் மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா

வாணியம்பாடி, ஜன.16–

*வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.*

நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் விமல்சந்த் தலைமை வகித்தார். அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் சுரேஷ், கல்லூரி முதல்வர் செந்தில்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை முதல்வர் நித்யா வரவேற்றார்.

காளைகள் பூட்டிய மாட்டு வண்டியில் கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியைகள் மற்றும் மாணவிகள் பாரம்பரிய உடைகளை அணிந்து மேள தாளத்துடன் வலம் வந்தனர். இதைத் தொடர்ந்து கரும்பு, பூஜை பொருட்களுடன், புதிய பானைகளில் பொங்கல் வைத்து, பசுக்களை அழைத்து வந்து கோபூஜை நடத்தினர்.

பின்னர் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், சிலம்பாட்டம், உறியடித்தல், மாட்டு வண்டி சவாரி, பேராசிரியைகள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கிடையே கயிறு இழுக்கும் போட்டி ஆகியன நடந்தது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

முன்னதாக, கஜா புயலால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், மாணவிகள் சேகரித்த ரூ.65 ஆயிரத்தை கல்லூரி நிர்வாகத்தினரிடம் வழங்கினர். இதில், கல்லூரி மக்கள் தொடர்பு அலுவலர் சக்திமாலா மற்றும் பேராசிரியைகள், மாணவிகள், பெற்றோர்கள், அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர். பேராசிரியை செம்மலர் நன்றி கூறினார்.

Page No. 3

# PONGAL CELEBRATION

## छात्राओं ने बनाया मीठा पोंगल



वानियमबाडी स्थित मरुधर केसरी जैन महिला महाविद्यालय में रविवार को हर्षोल्लास से पोंगल त्यौहार मनाया गया। इस मौके पर ग्रामीण परिवेश में छात्राओं ने नए चावल का मीठा पोंगल बनाकर सूर्यदेव की आराधना की एवं उनको भोग लगाया। छात्राओं ने मटकी फोड़ खेल, झूला झूलकर खुशी मनाई। फिर कालेज अध्यक्ष विमल चंद जैन ने गायों की पूजा व आरती उतारी। महोत्सव में कालेज प्रिंसिपल सेन्दिल कुमार ने भी हिस्सा लिया।

पत्रिका Mon, 14 January 2019
epaper.patrika.com/c/35776173